மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 377, திரு. கே. செல்வராஜ்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

377–

கோயம்புத்தூர் மாநகராட்சியின் முக்கிய சாலைகளில் பாதாள மின் கம்பி பதித்தல்

***15216**-திரு. கே. செல்வராஜ்:*

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் முக்கிய சாலைப் பகுதியில் உள்ள மின்சாரக் கம்பிகளை மாற்றி, பாதாளக் கம்பி பதிப்பு செய்து மின்சாரப் பிரிவை நவீனப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில்; எப்போது அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி முக்கிய சாலைப் பகுதிகளில் உள்ள மின்சாரக் கம்பிகளை மாற்றி பாதாளக் கம்பி பதிப்பு செய்து மின்சாரப் பிரிவை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, கோவை மாநகராட்சியில் உள்ள முக்கிய சாலைப் பகுதிகளில், மின்சாரக் கம்பிகளை மாற்றி பாதாளக் கம்பி பதிப்பு செய்து மின்சாரப் பிரிவை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்று கூறினார்கள். கடந்த ஆண்டு மாநகராட்சியில் 3 மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு மாறாக கோவை ஆர்.எஸ். புரம், திவான்பகதூர் ரோடு பகுதிகளில் 1 கோடி ரூபாய் செலவில், பாதாளக் கம்பிகளைப் பதித்து, அந்தப் பணியைச் செயல்படுத்த-முதல்கட்டமாக பணிகளைச் செய்தும்—தொடர்ந்து மாநகராட்சி

மூலமாக செய்வதாகக் கூறியிருந்தார்கள். அந்தத் திட்டக் குறிப்பு என்ன ஆனது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருக்கின்ற கேள்விக்கு என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில், நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாத காரணத்தாலே, கோவையிலே சில முக்கியமான சாலைகளிலே பாதாளக் கம்பிகளைப் பதிக்கவேண்டிய அவசியம் இருப்பினும் கூட, தற்போதைக்குச் செய்ய இயலவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே கோவையின் முக்கிய சாலைகள் என்று கருதப்படும் ஒப்பனக்கார வீதி, பெரிய கடை வீதி, திருச்சி ரோடு, அவினாசி ரோடு, டாக்டர் நஞ்சப்பா ரோடு, ஆர்.எஸ். புரம், திவான்பகதூர் ரோடு ஆகிய பகுதிகளில் பாதாள புதைகம்பி பதிக்கவேண்டியது அவசியம் என்று கருதினாலும், மேற்குறிப்பிட்ட சாலைகளில் பாதாளக் கம்பிகளைப் பதிப்பதற்கு 6 கோடியே 27 லட்சம் மொத்த மதிப்பீடு தேவைப்படுகிறது என்ற காரணத்தால் நிதி வசதி மேம்படுத்தப்பட்டவுடன், கோயம்புத்தூர் மாநகராட்சி இதுகுறித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்றும், செய்வதற்கான நிதி வசதிகள் இருக்கின்றபோது செய்வதாகக் கூறினார்கள். எங்களது கோவை மாநகராட்சிக்கும், சென்னை மாநகராட்சிக்கு எழில்மிகு சென்னை என்ற திட்டத்திற்கு நிதி ஒதுக்குவது போல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசினுடைய நிதியை ஒதுக்கி, வருகின்ற நிதி ஆண்டிலாவது, அந்தப் பணிகளைச் செய்து, கோவை நகரில் எங்கு பார்த்தாலும், ஒயர்கள் குறுக்கும் நெடுக்குமாக ரோடுகளில் செல்லுகிற காரணத்தால், பஸ்களில் செல்லுகிறபோதுகூட பஸ்களில் முட்டுகின்ற அளவிற்கு ஒரு சில இடங்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த ஒயர்களை மாற்றி, பாதாளக் கம்பிகளைப் பதிக்கும் பணியை அடுத்த நிதி ஆண்டில் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழில்மிகு சென்னை 2000-ஐப் பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சியிலே பெறப்படுகின்ற நிதி ஆதாரத்தை

வைத்து முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறது. இதற்கு என்று பிரத்யேகமாக அரசு எந்த நிதியும் ஒதுக்கவில்லை. அந்த அடிப்படையில் கோவை மாநகராட்சிக்கு என்று அரசு மூலமாக நிதி ஒதுக்கீடு என்ற பேச்சுக்கு இடமில்லை. எந்த ஒரு உள்ளாட்சியும் தன்னுடைய உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கின்ற நிதி ஆதாரத்தை வைத்துத்தான் அங்கே இருக்கின்ற மக்களுக்கு பல்வேறு தேவைகளையும் திட்டங்களையும் வழங்கவேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. அந்த அடிப்படையிலே கோவை மாநகராட்சியிலே பல்வேறு பணிகள் வரலாற்றிலே எந்தக் காலகட்டத்திலும் இல்லாத அளவிற்கு நிதி ஆதாரம் பெருக்கப்பட்டு, பல அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பாதாளக் கம்பியைப் பற்றி மீண்டும் கேட்டிருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரை, மாநகராட்சியினுடைய நிதிநிலைமை மேம்படுத்தப்பட்டவுடன், நிச்சயமாக இந்தக் கருத்துரு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அதிக அளவு வருமானத்தை ஈட்டித் தருகின்ற ஒரு மாவட்டம் கோவை மாவட்டம். அந்த மாவட்டத்திலே மிக அதிகமான தொழிற்சாலைகளும், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலே பஞ்சாலைகளும் இருக்கின்றன. அதிக வருமானத்தை இந்த மாநகராட்சிக்கு ஈட்டித் தருவதே கோவை மாநகர தொழிற்சாலைகளும் தொழிலதிபர்களும்தான். அப்படி இருக்கின்றபொழுது கோவை மாநகராட்சியை எழில்மிகு கோவை மாநகரம் 2000 என்ற பெயரில் அங்கேயிருக்கின்ற நிதியைப் பொறுத்து எதிர்காலத்திலே ஒரு திட்டம் வகுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கின்ற பொழுது தமிழகத்திலேயே பல வசதிமிக்க மாவட்டம் கோவை மாவட்டம். அந்த அடிப்படையிலே நிதியாதாரத்தைப் பெருக்குவதற்கு மாநகராட்சி அத்துணை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே தமிழகத்திலே இருக்கின்ற மூன்று மாநகராட்சிகளிலே சமீபத்திலே உயர்த்தப்பட்ட

சொத்து வரியின் காரணமாக வழக்காடு மன்றங்களுக்குச் சென்றவர்கள் கோவை மாநகரத்திலேதான் அதிகமாக இருக்கிறார்கள். பண வசதி இருந்தாலும் மனதிலே இடமில்லாத காரணத்தால் இப்படிப்பட்ட நிகழ்வுகள் அங்கே நடைபெற்றிருக்கின்றன. இருந்தாலும்கூட, கன்சிலியேஷன் என்ற அடிப்படையிலே அங்கேயிருக்கின்ற வியாபாரிகளையும், தொழிலதிபர்களையும் தற்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற மாநகராட்சியினுடைய ஆணையாளரவர்கள் அழைத்துப் பேசி நிதி வசூல் செய்வதிலே, மாநகராட்சியினுடைய நிதியாதாரத்தைப் பெருக்குவதிலே முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாளை வர இருக்கின்ற மானியக் கோரிக்கையிலே எழில்மிகு கோவை 2000 என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய நல்லாசியோடும், ஆணையோடும் அறிவிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 378, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

378–

அம்பாசமுத்திரத்தில் குடிநீர்த் திட்டத்திற்கு நிலங்கள் கையகப்படுத்தல்

**21259-திரு. ஆர். முருகையா பாண்டியன்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றத்தின் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அம்பாசமுத்திரம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலங்கள் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS